செ.வெ.எண்.38 நாள்.13.10.2017.

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தீயணைப்புத் துறையின் மூலம் தீ தடுப்பு மற்றும் வெள்ள காலங்களில் உயிர் காப்பது குறித்த செயல் விளக்கம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

-------

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தீயணைப்புத் துறையின் மூலம் தீ தடுப்பு மற்றும் வெள்ள காலங்களில் உயிர் காப்பது குறித்த செயல் விளக்கப் பயிற்சி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் இன்று (13.10.2017) நடைபெற்றது.

இச்செயல் விளக்கப் பயிற்சியில், திருநெல்வேலி மாவட்ட தீயணைப்பு அலுவலர் திரு.சரவணபாபு அவர்களின் தலைமையிலான 40 தீயணைப்பு வீரர்கள் பங்கேற்று, தீ தடுப்பு குறித்தும், தீ விபத்து காலங்களில் காயமடைந்தவர்களை மீட்பது குறித்தும், வெள்ளம் ஏற்படும் காலங்களில் உயிர் காப்பது என்பது குறித்தும், IPG எரிவாயு விபத்திலிருந்து காத்தல், வெள்ள கால மீட்பு, தீ விபத்தின் போது உயர் மாடி கட்டடத்திலிருந்து மீட்பது பேரிடர் காலங்களில் பாதுகாத்துக் கொள்வது, சிறு தீயணைப்பு கருவிகளை பயன்படுத்துதல், வெள்ளக் காலங்களில் வீட்டில் உள்ள குடம், வாட்டர் கேன், தேங்காய் நெற்று, டயர் டியூப், குடிநீர் பாட்டில்கள், பெரிய கேன்களை பயன்படுத்தி தற்காத்துக் கொள்வது, வெள்ளத்தை சிக்கியவர்களை மீட்பது குறித்த செயல் விளக்கங்களும் செய்து காண்பிக்கப்பட்டது.

செயல் விளக்கத்தின் போது, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தீ விபத்து ஏற்பட்டதைப் போல், தீயணைப்பு வண்டிகள் மூலம் தீயணைக்கப்பட்டு, தீ விபத்துக்களில் சிக்கியவர்களை மீட்டு, ஆம்புலன்ஸ் வண்டிகளில் கொண்டு செல்வது போலவும், செயல் விளக்கப் பயிற்சியின் போது தீயணைப்புத் துறை வீரர்கள் சிறப்பாக செய்து காண்பித்தனர்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம், திருநெல்வேலி கோட்டாட்சித் தலைவர் திருமதி.மைதிலி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.இராமசுப்பிரமணியன், தீயணைப்பு அலுவலர்கள் (பாளையங்கோட்டை) திரு.ஜெகதீஸ், (ஆலங்குளம்) திரு.பிரதீப்குமார், மாவட்ட ஆட்சியர் அலுவலக மேலாளர் (வருவாய் பிரிவு) திரு.சிவகுமார், மாவட்ட ஆட்சியர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.